பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 17 | செவ்வாய்க்கிழமை | 29.04.2025 | அதிர்வு 268

## மைத்திரி நீதிமன்றில் சாட்சியம்



கொழும்பு, பொரலஸ்கமுவ பிரதேசத்தில் 2008 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கின் 06



## முன்னாள் அமைச்சர்கள் மூவர் விரைவில் கைது?

இலங்கையில் முன்னைய அரசுகளின் காலங்களில் அமைச்சர்களாகப் பதவி வகித்த மூன்று அரசியல்வாதிகள் விரைவில் கைது செய்யப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இவர்கள் மூவரும் 06




# தமிழர்களின் இடங்களில் தமிழர்கள் ஆளவேண்டும்

## தமிழரசின் வடமராட்சி பிரசாரத்தில் சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

“அநுர அரசு வாக்குகளுக்காகக் கண்டபடி பொய் சொல்லி வருகின்றது. தமிழர்களின் இடங்களில் தமிழர்கள் ஆளவேண்டும். தமிழர்களின் இடங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் சிங்களக் கட்சிகள் ஆட்சியமைக்க ஒரு போதும் அனுமதியளிக்கக்கூடாது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார். 06

## தபால் மூல வாக்களிப்பு இன்றுடன் நிறைவு! இனி கால அவகாசம் வழங்கப்படமாட்டாது!!

### தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

“உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு இன்று செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைகின்றது. இதுவரையான காலப்பகுதியில் வாக்களிக்காத அரச உத்தியோகத்தர்கள் இன்று தவறாமல் வாக்களிக்க 06







ஈஸ்டர் தொடர்க் குண்டுத் தாக்குதல் விசாரணை விடயத்தில் அரசாங்கம் சும்மா இருக்கவில்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

முக்கிய - மூத்த அரசியல் தரப்புகள், பாதுகாப்புத் தரப்புகளை ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் பெயரில் கைது கைது செய்தால் அது பெரும் சர்ச்சைகள், களேபரங்களை ஏற்படுத்தும் என்று கருதும் அரசுத் தலைமை, வேறு நெருக்கடிகளின் பேரில் - குறிப்பாக ஊழல், மோசடிகளின் பேரில் - கைது செய்துவிட்டு, பின்னர் ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பில் சம்பந்தப்பட்டோரின் பங்களிப்பை ‘உள்ளே வைத்துக் கொண்டு’ நோண்டி நெங்கெடுக்கலாம் என்று அரசுத் தரப்புக் கருதுவதாக கூறப்படுகின்றது.

பிள்ளையான் கூட, வேறொரு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டார் என்றுதான் கூறப்பட்டது. ஆனால், இப்போது ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டு தாக்குதல் குறித்து 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# தராகி சிவராம், ரஜிவர்மனின் நினைவேந்தல் வடமராட்சி ஊடக இல்லத்தில் அனுஷ்டிப்பு!

(எஸ்.ரகுதீஸ்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி ஊடக இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களான தராகி சிவராமின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், செல்வராசா ரஜிவர்மனின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று திங்கள் கிழமை அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் தராகி சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு – பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து இனம் தெரியாதவர்களால் வெள்ளை வானில் கடத்தப்பட்ட பின்னர் சுட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் இலங்கை நாடாளுமன்றத்துக்கு அருகில் அவரது சடலம் மீட்கப்பட்டிருந்தது.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி காலை 10.30 மணியளவில் யாழ். ஸ்டான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

யாழ்.வடமராட்சி ஊடக இல்ல செயலாளர் இரா.மயூதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு வடமராட்சி ஊடக இல்ல தலைவர் கு.மகாலிங்கம் மாலை அணிவித்தார். தொடர்ந்து ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.











யாழ் வடமராட்சி ஊடக இல்லம்
JAFFNA VADAMARADCHI MEDIA HOUSE
යාපන වඩමාරච්චි මාධ්‍ය මාලිගාව
பதிவு இல: DS/VOR/KVD/SS-2018-02

# ஊடகவியலாளர் படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்

## யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தல்

இலங்கையில் இடம்பெற்ற சகல ஊடகவியலாளர் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படுவதன் மூலம் நீதியை நிலைநாட்ட புதிய அரசாங்கம் முன்வர வேண்டும் என யாழ் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தியுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் 20 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"இலங்கையின் மிக முக்கிய ஊடகவியலாளர்களில் ஒருவராக சர்வதேச அளவில் புகழ்பெற்று விளங்கிய மாமனிதர் தராகி சிவராமின் படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை உரிய விசாரணைகள் எவையும் இன்றி ஆட்சிகள் மாறினாலும் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமலும், அதற்கான நீதி பொறிமுறை உருவாக்கப்படாமலும் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டு வருகின்றமை இலங்கையின் உள்ளக பொறிமுறைக்குட்பட்டதான பாதுகாப்பு மற்றும் நீதித்துறை மீதான ஐயப்பாட்டினை வலுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் துப்பாக்கி முனையில் இடம்பெற்ற படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், கைதுகள் உள்ளிட்ட செயற்பாடுகள் மூலம் தமிழ் ஊடகத்துறையை அச்சுறுத்தி அடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த முனைப்புகள் தற்போதும் புதிய புதிய வடிவங்களில் தொடர்ந்தே வருகின்றன. தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்து வரும் ஊடகத்துறையை நசுக்குவதன் ஊடாக தமிழர்களின் குரலை மௌனிக்கச் செய்யும் நோக்கிலேயே இவை தொடர்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணியில் இலங்கை அரச படைகள் மற்றும் அவர்களோடு சேர்ந்து இயங்கிய துணை ஆயுதக்குழுவினருமே இருந்துள்ளனர். இருந்து வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவ்வாறு இருந்தும் நிமலராஜன் முதல் சிவராம் உட்பட பல ஊடகவியலாளர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டும், கடத்தப்பட்டு காணமல் ஆக்கப்பட்டமையுடன் தொடர்புடைய குற்றவாளிகளான மேற்குறித்த எவரொருவரும் நீதி பொறிமுறை ஊடாக கண்டுபிடிக்கப்படாத நிலையே தற்போது வரை தொடர்கின்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகத்துறை மீதான இவ்வாறான அச்சுறுத்தல் நிலையானது இலங்கையில் நிலவும் ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றின் மீதான கொடூரமான அடக்குமுறையின் வெளிப்பாடாகும்.

கொலைக் கலாசாரத்தின் பின்னணியில் ஊடகத்துறை மீதான இவ்வாறான தலையீடுகள் தொடர்வதனை உடனடியாக தடுத்து நிறுத்துவதுடன் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் இதுவரைகாலமும் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை மூலம் நீதியை நிலைநாட்ட புதிய அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும் என, படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவு நாளில் யாழ் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தி நிற்கின்றது.

இதேவேளை, தற்போது இராணுவத்தினரது ஆக்கிரமிப்பில் உள்ள, மாமனிதர் தராகி சிவராமால் கிளிநொச்சி அறிவியல் நகரில் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஊடக கல்லூரி வளாகத்தை உடனடியாக விடுவித்து அதனை யாழ் பல்கலைக் கழகத்தின் கீழ் தனி அலகாக கொண்டுவந்து ஊடக கற்கை பீடமாக தொடர்வதற்குரிய நடவடிக்கைகளினை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் தமிழ் ஊடகத்துறையினர் சார்பில் நாம் வினயமாக கேட்டுக் கொள்கின்றோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர தாக்கல் செய்த எழுத்தாணை மனு தள்ளுபடி

தாம் கைது செய்யப்படுவதை தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை விசாரணை எடுத்துக்கொள்ளாமல் தள்ளுபடி செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

மேன்முறையிட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி மொஹமட் லஃபார் தாஹீர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

களனி பிரதேச செயலக பிரிவில் அரச காணியொன்றை முறையற்ற விதத்தில் கையகப்படுத்திய சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



இது தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட சிலர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# ஐ.நா. வெசாக் விழாவில் பங்கேற்க ஜனாதிபதி அநுர வியட்நாம் பயணம்

ஐ.நா. வெசாக் தின நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மே முதல் வாரத்தில் வியட்நாமுக்குப் பயணம் மேற்கொள்கின்றார்.

ஐ.நா. வெசாக் தின நிகழ்வுகள் மே 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை மியன்மாரின் ஹோ சி மின் நகரில் நடைபெறுகின்றது.

85 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட 2 ஆயிரத்து 700 விருந்தினர்கள் பங்கேற்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, கம்போடியா, நேபாளம், லாவோஸ் ஆகிய நாடுகளில் இருந்து உயர்மட்டத் தலைவர்கள் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே ஐ.நா. வெசாக் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொதுஜன பெரமுன வேட்பாளர் கைது

முன்னாள் அமைச்சர் சனத் நிஷாந்தவின் சகோதரரான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஜகத் சமந்த உள்ளிட்ட இருவர் ஆரச்சிகட்டு பகுதியில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் சட்டவிரோத பேரணி நடாத்தியமை தொடர்பில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பேரணி குறித்து புத்தளம் பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சிலாபம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.





# யாழில் காய்ச்சலால் பெண் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணத்தில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த கமலநாதன் ராஜபத்மினி (வயது 56) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் கடந்த சனிக்கிழமை கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.





# அடுக்குமாடி குடியிருப்புகளில் இஞ்சி, மஞ்சள் செய்கைகள்

இஞ்சி, மஞ்சள் செய்கையை நகர் பகுதிகளிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளிலும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தரமான பொலித்தீன் பைகள், சிறிய தொட்டிகள் மற்றும் ஒரு தடவை பயன்படுத்திவிட்டு வீசப்படும் கொள்கலன்களில் இந்த செய்கைகளை முன்னெடுக்க ஊக்குவிக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நகர்ப்புற மக்களின் வருடாந்த தேவைக்கு அமைவாக இஞ்சி, மஞ்சள் செய்கை முன்னெடுக்கப்படவுள்ளதுடன் இதற்கான செலவுகளை குறைப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் 398 முறைப்பாடுகள் பதிவாகின




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயங்களில் 30 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 9 முறைப்பாடுகளும் தேர்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பில் 21 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பதிவாகியுள்ளமுறைப்பாடுகள்தொடர்பில் வேட்பாளர் ஒருவரும், 7 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் நேற்று காலை வரை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் 398 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த காலப்பகுதியில் 30 வேட்பாளர்களும், 131 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 31 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அரசாங்கத்தின் வருமானம் 22 சதவீதத்தினால் உயர்வு

கடந்த ஜனவரி மாதம் அரசாங்கத்தின் வருமானம் 22 சதவீதத்தினால் உயர்ந்துள்ளதாக மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஜனவரி மாதத்தில் அரசாங்க வருமானம் 346.58 பில்லியனாக உயர்ந்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 283.13 பில்லியனாக காணப்பட்டது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரிடம் நோண்டப்படுவதாகத் தெரிகிறது.

விவசாய அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரின் கைது சீன உர இறக்குமதியுடன் அடங்கிவிடாது, அந்த இறக்குமதிக்கு உத்தரவிட்ட அரசியல் தலைமை வரை இந்த விசாரணை அம்பு பாயும் எனத் தெரிகிறது.

அத்தகைய ஒரு சம்பவத்தின் பேரில் முக்கிய புள்ளிகளைக் கைது செய்து, அதன் பின்னர் புலன்விசாரணையை ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் விவகாரத்தை நோக்கி விஸ்தரிப்பது என்பது அரசு தலைமையின் திட்டமாம்.

அதன் பிரகாரம் முன்னைய அரசு தலைவர், பாதுகாப்பு துறைகளில் முக்கிய பிரதானி உட்பட பலர் வரை ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் விசாரணைக் கணைகள் பாயக்கூடிய வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

\+ \+ \+

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேன் நிலவு முடிவுக்கு வருவதாக தெரிகிறது.

சஜித் தலைமையிலான தொலைபேசி சின்னம் சோர்ந்து விட்டது என்ற சார பட ஹக்கீம் கிழக்கில் பகிரங்கமாகக் கூறியிருப்பது சஜித் பிரேமதாஸவை பெரும் சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகிறது.

சஜித் தலைமையிலான கூட்டணியில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறுகின்றது அல்லது வெளியேற்றப்படுகின்றது என்று அறிவிப்பு எந்த நேரத்திலும் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## முன்னாள் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டவிரோத வாகனப் பயன்பாட்டுக் குற்றச்சாட்டின் கீழேயே கைது செய்யப்படவுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

பதிவு செய்யப்படாத வாகனங்களைப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் ஏற்கனவே முன்னாள் அமைச்சர்கள் மூவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், மீண்டும் இவ்வாறான குற்றச்சாட்டின் கீழ் எதிர்வரும் நாட்களில் மேலும் மூன்று முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

முக்கிய முன்னாள் அமைச்சர் ஒருவரும் இந்தக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதலாவது சாட்சியாளராகப் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை ஆஜராகி சாட்சியளித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்யும் நோக்கத்தில் 2008 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு, பொரலஸ்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு உதவி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இரண்டு நபர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் முதலாவது சாட்சியாளராகப் பெயரிடப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேன நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெடிகுண்டு அச்சுறுத்தல்: கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்தில் பாதுகாப்புப் படையினர் சோதனை



வெடிகுண்டு அச்சுறுத்தல் காரணமாகக் கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகத்தில் பாதுகாப்புப் படையினர் நேற்று அவசர சோதனையொன்றை நடத்தியுள்ளனர்.

ரஷ்ய தூதரகத்திற்கு வெளிநாட்டவர் ஒருவர் வழங்கிய சந்தேகத்திற்கிடமான மடிக்கணினி ஒன்றினால் அங்கு வெடிகுண்டு அச்சம் ஏற்பட்டது.

அந்த வெளிநாட்டவர் தூதரகத்திற்கு வந்து, மடிக்கணினியைக் கொடுத்து விட்டு, விரைவாகச் சென்றுள்ளார் என தெரியவந்துள்ளது.

அதன்படி, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும், சந்தேகத்துக்குரிய மடிக்கணினியில் வெடிபொருள்கள் எதுவும் காணப்படவில்லை எனத் தெரிவித்த கறுவாத்தோட்டம் பொலிஸார், இந்த விவகாரம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். வடமராட்சி வேட்பாளர்களை ஆதரித்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சாணக்கியன் எம்.பி.மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பொது எதிரியாக நாங்கள் தேசிய மக்கள் சக்தியைப் பார்க்கின்றோம். எமது மண்ணில் சிங்களத் தரப்புகள் ஆட்சி செய்யக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குப் பாடம் புகட்டுவோம் என்று சொல்பவர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அனைவரும் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். மே 7 ஆம் திகதி எனக்குத் தொலைபேசி எடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வென்றுவிட்டது என்ற தகவலைச் சொல்லுங்கள்." - என்றார்.

## தபால் மூல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும். தபால் மூல வாக்களிப்புக்கு இனி கால அவகாசம் வழங்கப்படமாட்டாது."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு தபால் மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கான தபால் மூல வாக்களிப்புக்கு நான்கு நாட்கள் ஒதுக்கப்பட்டன.

இதற்கமைய கடந்த வியாழக்கிழமை (24), வெள்ளிக்கிழமை (25) ஆகிய தினங்களில் முதற்கட்டமாகத் தபால் மூல வாக்களிப்பு நடைபெற்றது. அதேபோல் நேற்று (28) திங்கட்கிழமை மூன்றாவது நாளாக வாக்கெடுப்பு நடைப்பெற்றது. இறுதியாக இன்று (29) செவ்வாய்க்கிழமை தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கு ஒதுக்கப்பட்ட நான்கு நாட்கள் இன்றுடன் நிறைவடைகின்ற நிலையில் தபால் மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்ற அரச உத்தியோகத்தர்கள் தவறாமல் இன்று வாக்களிக்க வேண்டும் என்றும், வாக்களிப்புக்கான கால அவகாசம் இனி வழங்கப்படமாட்டாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் இன்றுடன் நிறைவடைகின்றது. இதுவரையான காலப் பகுதியில்வாக்காளர்அட்டைகள்கிடைக்கப் பெறாதவர்கள் தமது வதிவிடப் பகுதியில் உள்ள தபால் நிலையத்துக்குச் சென்று தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் தமது வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வாக்காளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.



# பதுளை தோட்டத்தில் மின்னல் தாக்கியதில் பெண் தொழிலாளி பலி; ஐவருக்குக் காயம்

பதுளை, எட்டம்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிங்ரோஸ் நெலுவ தோட்டத்தில் பெண் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிங்ரோஸ் நெலுவ பகுதியில் வசித்த 47 வயதான – கொழுந்து பறிக்கும் தொழிலை மேற்கொள்ளும் – பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்தில் மேலும் ஐந்து பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை பெய்த இடியுடன் கூடிய மழையின்போது இந்தப் பெண்ணுடன் வேலை செய்துகொண்டிருந்த சிலர் மழையிலிருந்து தம்மை பாதுகாத்து கொள்வதற்காக கொழுந்து நிறுக்கும் பகுதிக்குச் சென்றபோதே இந்த மின்னல் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# சீன உர இறக்குமதி ஒப்பந்த ஊழல் தொடர்பில் விவசாய அமைச்சின் மேலதிக செயலர் கைது!

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்ட ஊவா மாகாண சபையின் தலைமைச் செயலாளரும் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவருமான மகேஷ் கம்மன்பிலவை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சீன உர இறக்குமதி ஒப்பந்தம் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

மகேஷ் கம்மன்பில நீண்ட கால சிவில் சேவையாளர் ஒருவர் ஆவார்.

இவர் விவசாயத்துறை அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றிய காலத்தில் சீனாவிலிருந்து தரமற்ற உரங்களை இறக்குமதி செய்வதற்காக இடைநிறுத்தப்பட்ட கடன் அறிக்கைகளை மீண்டும் செயற்படுத்த உத்தரவிட்ட குற்றச்சாட்டின் பேரில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினரால் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட மகேஷ் கம்மன்பில கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தொடரும் குற்றம்!

மனித உரிமை மீறல்கள், கொடூரக் குற்றங்கள் போன்றவை இழைக்கப்பட்ட காலத்தில் அவற்றுக்கு இடமளித்துப் பார்த்திருந்த அல்லது அத்தகைய கொடூரங்களுக்கு ஊக்கமளித்த ஆட்சி தரப்புகள் பெரும் குற்றவாளிகள் என்றால், அந்தக் குற்றங்கள் குறித்து விசாரணை செய்யாமல், விசாரணைக்கான வாய்ப்புகளை மூடி மறைத்துத் தொடர்ந்து அந்த நிலைமையைப் பேணும் இப்போதைய ஆட்சித் தரப்பும் அதே குற்றத்தை புரிந்ததாகவே கருதப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், படுகொலைகள் போன்றவை அவை நிகழ்ந்த காலத்தில் மட்டும் குற்றங்கள் அல்ல. அவை தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்படாமல் மூடி மறைக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்படாமல், பொறுப்பு கூறல் நடைமுறைப்படுத்தப்படாமல், அநீதியான நிலை தொடரும் காலத்தில், அதற்குக் காரணமாக இருக்கும் ஆட்சியாளர்களும் அந்த குற்றங்களுக்கு பொறுப்பானவர்களே.

நாட்டில் இருண்ட காலம் என்று பேசப்பட்ட யுத்தத்தின் இறுதிக் காலம் மட்டுமல்ல, அதன் தொடராக இன்று வரை அந்த குற்றங்கள் இழைக்கப்பட்டு கொண்டு இருப்பனவாகவே கருதப்பட வேண்டும்.

யுத்தத்தின் கடைசி 20 ஆண்டுகளில் ஊடகவியலாளர்களுக்கு விசேடமாக தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள், கொடூரங்கள் விசாரிக்கப்படவில்லை. குற்றங்களை இழைத்த குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. சுதந்திர வீரர்களாக அவர்கள் நடமாடுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் அந்தக் கொடூரங்களுக்கு காரணமானவர்கள் நாட்டின் தேச பக்தர்களாகவும் தேசத்தை காத்த உயர்ந்த மனிதர்களாகவும் மதிக்கப்படும் குரூரம் இந்த நாட்டில் தொடர்கின்றது. யுத்த காலத்தில் ஊடகங்களுக்கு எதிராக ஆட்சிப் பீடத்துக்கு ஆதரவான தரப்புகள் புரிந்த குற்றங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட தண்டனை விலக்களிப்புக் குரூரம் இன்னும் தொடருகின்றது.

இலங்கையில் மதிக்கப்பட்ட ஆங்கில, தமிழ் ஊடகவியலாளரான தராக்கி சிவராம் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் இருபது ஆண்டுகள் கடந்து விட்டன.

பி.பி.ஸி. செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழ் ஊடகப் பரப்புக்கு எதிரான படுகொலைக் கலாசாரம் இதுவரை 41 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்படவோ அல்லது காணாமல் ஆக்கப்படவோ வழி செய்திருக்கின்றது. தவிரவும் பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டு, இம்சை படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கின்றன. இவை தொடர்பில் இதுவரை நீதி, நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. உண்மைகள் அம்பலப்படுத்தப்படவில்லை. புலனாய்வுகளோ, சட்ட நடவடிக்கைகளோ நேர்மையாக மேற்கொள்ளப்படவில்லை.

தென்னிலங்கையில் படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஒரிரு பெரும்பான்மையின ஊடகவியலாளர்கள் தொடர்பில் மட்டும் வெளிப்பூச்சுக்கு விசாரணைகள் நடைபெற்றதான நாடகங்கள் ஆடப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான்.

ஊடகங்களுக்கு எதிரான கொடூரங்கள் தொடர்பில் நீதி, நியாயமான விசாரணைகளை முன்னெடுத்து, உண்மைகளை அம்பலப்படுத்த முயலாத இந்த அரசும் கூட, அந்தக் குற்றங்களை மூடி மறைத்த பெருங்குற்றத்திற்குப் பொறுப்பாக வேண்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

9

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

சில வாசகர்கள், லயனல் போபகே – சித்ராவின் பின்னணிகள் பற்றி சில விவரங்களை எழுத வேண்டும் எனக் கோரினார்கள்.

ஆச்சரியமற்றதானாலும், அடிக்கடி கேட்கப்பட்ட பிரசாரமானாலும், இனப்பிரச்சினை பற்றிய விவகாரத்ததை கடும் போக்கில் ஆதரித்த சில சிங்கள தரப்புகள் கூட அவர் (போபகே) ஜே.வி.பியில் இருந்து பிரிந்தது கத்தோலிக்க நடைமுறைதான், அதற்கு எப்படி முலாம் பூசலாம் என கேட்டார்கள்.

லயனல் போபகே – சித்ரா இருவருமே இனப் பிரச்சினை தீர்வுகளின் வரலாற்றில் காலத்தினால் புடம் போடப்பட்ட பாத்திரங்கள். அதற்காக கர்ணன் போன்றோ, விபூஷணன் மாதிரியோ குறிப்பிடப்பட வேண்டியவர்கள். அந்த கதாபாத்திரங்கள் போல, காலம் கடந்தும் இனப் பிரச்சினை வரலாறுகள் இவர்களைப் பற்றி பல கோணங்களில் பேசும். ஆனால் எப்படி மகாபாரதம் கர்ணனையும் இராமாயணம் விபூஷணனையும் பற்றியது அல்லவோ, அதுபோல இந்த ஆக்கமும் அவர்களைப் பற்றியது அல்ல. எனினும் வாசகர்களின் கோரிக்கைகளுக்காக சிலவற்றைக் கோடி காட்டுகிறேன்.



ராஜமார்த்தாண்டன் ஆசிரியர்



ஐம்பது ஆண்டுகளின் பின்னர் சந்தித்த போபகே - குகன்

அதைவிட, லயனல் போபகே சிவில் அமைப்பு இயக்கம் (Civil Rights Movement), இனங்களுக்கிடையே நீதிக்கும் சமாதானத்துக்குமான இயக்கம் (MIRJE) என்ற கருத்தாக்கத்தில் பதிவு இருந்ததாக சில வாசகர்கள் – சில ஆஜசுதுநு அங்கத்தினரே – சுட்டிக் காட்டினர். இவற்றைத் தெளிவு படுத்துவதும் அவசியம். 1977-இல் லயனல் போபகேயும் மற்றைய ஜே.வி.பி. அங்கத்தவர்களும் சிறையில் இருந்த போது மனித உரிமைகள் பற்றிய அழுத்தங்கள் தருவதற்காக சட்டத்தரணிகள் சூர்யா விக்ரமசிங்க, டெஸ்மெண்ட் பெர்னாண்டோ, ரெஜி சிறிவர்த்தன, சுனிலா அபயசேகரா போன்றவர்களால் Civil Rights Movement தொடங்கப்பட்டது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

ஜே.ஆருக்கு முன்னான சிறிமாவோவின் அரசாங்கம் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து குற்றவியல் நீதி ஆணைக்குழுவுக்கான (Criminal Justice Commission) சட்டமூலங்களை ஏற்படுத்திய போது மனித உரிமைகளுக்கு அமைவாக அவை இருக்க வேண்டும் என்று அழுத்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்டது. அதில் ஜே.வி.பிக்கு சார்பான இலங்கை ஆசிரியர் சங்கத்தின் Ceylon Teachers Union செயலாளர் எச்.என்.பெர்னாண்டோவும் இணைந்து இருந்தார். ஆகவே லயனல் போபகே அதன் ஆரம்ப கால உறுப்பினர் அல்லர். சிறையில் இருந்து வெளியேறிய பின் அவர்களோடு ஆர்வமாக செயல்பட்டார். ஆஐசுதுநுஇன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அது தொடங்கப்படுவதற்கு ஆதரவாக செயல்பட்டு, அதன் தொடக்கத்தை சமுதாயத்துக்கும் மதங்களுக்குமான மையம் (Centre For Society and Religion) ஏற்படுத்திய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பங்குபற்றியமையையும் விஜயவீரவுக்கு அறிவித்த போது அது விஜயவீரவுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. இனங்களுக்கிடையே சமத்துவத்தையும் நீதியையும் ஏற்படுத்துவதே அவர்களது முக்கியமான கொள்கையானால் அவர்களிடமிருந்து பலத்த அழுத்தங்கள் தங்களுக்கு வர கூடும் என்பதால் ஜே.வி.பி. அதன் அங்குரார்ப்பண உறுப்பினராக இருப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதனால் அத்தரப்புகளுடன் பின்னாள்களில் இருந்த சிறிது ஊடாட்டங்கள் கூட தனிப்பட்ட முறையிலேயே இருந்தன. ஜே.வி.பி. தரப்பில் அல்ல.

ஆகவே தங்களுக்கான தனியான மனித உரிமை அமைப்பை உருவாக்கும் நோக்கிலேயே சுனிலா அபயசேகரவுடன் கன்னியாஸ்திரி மடத்தில் சித்ராவைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்தார்.

பின்னாளில் சிறையில் இருந்த பொழுது லயனல் போபகே தமிழ் கைதிகளின் சந்திப்புகள் ஊடாக அவர்களது ஏமாற்றங்கள், வேதனைகள், அங்கலாய்ப்புகள், அவற்றில் எழுந்த விரக்திகளைப் புரிந்து கொள்ளும் ஆதங்கம் பின்னர் அவரது பிறந்த ஊரான வெலிகமவில் உறவாடிய மக்கள், பின்னர் படித்த பள்ளிக்கூடங்களான மாத்தறையில் ராகுல பாடசாலை, அங்கு சந்தித்த தமிழ் மாணவர்கள், ஆசிரியர்களின் நட்புக்களால் ஏற்பட்டவை.

அவர் 11, 12 ஆம் வகுப்புகளில் இருந்த போது சோமசுந்தரம் என்பவர் பௌதிகமும் விளையாட்டும் ரிச்மண்ட் கல்லூரியில் படிப்பித்தார். அவரோடு விநாயகம்பிள்ளை இரசாயனம் கற்பித்தார். பாடசாலையின் மாணவர்களுக்கும் சக ஆசிரியர்களுக்கும் அவர்களை நன்கு பிடித்திருந்தது. ஆயின், 1958இன் கலவரம் அவர்களை கல்லூரியில் இருந்து அகற்றியது.

அதேபோல ராஜமார்த்தாண்டன் என்ற இந்திய பின்னணி கொண்ட ஆசிரியரை லயனல் போபகே, ராகுல பாடசாலைக்கு ரயிலில் செல்லும் போது நட்பாகி, ஆங்கிலத்தில் இரசாயனம் படிப்பித்து, லயனல் போபகேயின் ஆங்கில சித்தி குறைவாக இருந்ததால், தனிப்பட்ட வகுப்புகள் இலவசமாக தந்து, முன்னேற உதவியவர். பின்னாளில் குடும்பத்துடனும் பழகி இருவருடைய குடும்பங்களும் மிக


லயனல் போபகே

நட்பாக இருந்தன.

1958 ஆம் ஆண்டுக் கலவரம் தொடங்கிய நாளில் ராஜமார்த்தாண்டன் ரயிலில் வரவில்லை. எது வித செய்திகளும் அறிந்து கொள்ள முடியவில்ல. ஊரடங்குகள் முடிந்து லயனல் போபகேயும் அவரது தகப்பனாரும் ராஜமார்த்தாண்டனின் வீட்டுக்குச் சென்ற போது அது முற்றாக எரிக்கப்பட்டு இருந்தது. அவருக்கு என்ன நடந்தது, எங்கே போனார் என்று தெரியவில்லை. பள்ளிக்கூடத்திற்கும் தகவல் இல்லை என்பதால் அவர் இந்தியா சென்று விட்டார் என்று எண்ணிக் கொள்ள வேண்டியிருந்தது.

போபகேயுடைய தந்தையார் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினர். அவரது மாவட்டத்தில் தேர்தல்களிலும் போட்டியிட்டவர். அதற்காக அங்கிருந்த தமிழ் வர்த்தகர்கள் உதவினர். முக்கியமாகத் தனிப்பட்ட பஸ்கள் வைத்து போக்குவரத்து வியாபாரத்தை நடத்திய தமிழர் ஒருவர் தாராளமாக உதவி செய்தவர். அவரது பஸ்களும் எரிக்கப்பட்டு, குடும்பம் தாக்குதலுக்கு இலக்காகி, அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

ராஜமார்த்தாண்டனுக்கு என்ன நடந்தது, பஸ் சேவை நடத்தியவர் என்ன ஆனார் என்ற புதிர்களுக்கு ஐம்பது வருடங்களுக்கு பின்னர் லயனல் போபகே லண்டனில் கூட்டம் ஒன்றுக்கு அழைத்துச் சென்ற வாகன ஓட்டிடமிருந்துதான் அவர் அறிந்து கொண்டார். அவர் – அந்த சாரதி – பஸ்களின் உரிமையாளரின் குடும்பத்தினர். போபகேயின் பாலிய நண்பர். அவரின் பெயர் குகன். ஆனால் உறவுகள் பல ஆண்டுகளாக அறுந்த நிலையில் இருந்தன. குகன் புளொட் இயக்கத்தின் முக்கிய அங்கத்தவராகி, பின் லண்டனில் குடியேறியவர். ராஜமார்த்தாண்டன் இந்தியாவுக்கு வெளியேறாமல், யாழ்ப்பாணத்தில் ஹாட்லிக் கல்லூரியில் பதவி

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?


சித்ரா

தொடர்ச்சி▲

யேற்று, அங்கிருந்து இளைப்பாறி, அங்கேயே இறந்தார் என்று செய்தி கிடைத்தது.

லயனல் போபகேயின் மனதில் இவர்கள் எவரும் – குகன் கூட – கலவரத்திற்குப் பின்னர் ஏன் ஒரு முறை கூட தன்னுடன் தொடர்பு கொள்ளவில்லை, ராஜமார்த்தாண்டோனோ குகனின் குடும்பமுமோ ஏன் அவர்கள் வீடுகளை வந்து பார்க்கவில்லை என்ற கேள்விதான் எழுந்தது. எவ்வளவோ நம்பிக்கையில் எந்த வித பேதங்களும் இன்றி வாழ்ந்த தங்களுக்கு, அங்கு நடத்தப்பட்டவற்றை தாங்கிக் கொள்ள முடியவில்லை, யாரை நம்பி திரும்பி வருவது, சுற்றமே சேர்ந்து இவற்றைச் செய்த போது அவர்களில் யாரை தெரிவது என்று வாளாவிருந்து விட்டோம் என்பதுதான் அவர்களின் நிலையாக இருந்தது.

நாளை சித்ராவின் பின்னணியைப் பார்ப்போம். **(தொடரும்)**

---

# ஊடகவியலாளர் படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்

## யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தல்

இலங்கையில் இடம்பெற்ற சகல ஊடகவியலாளர் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படுவதன் மூலம் நீதியை நிலைநாட்ட புதிய அரசாங்கம் முன்வர வேண்டும் என யாழ் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தியுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் 20 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"இலங்கையின் மிக முக்கிய ஊடகவியலாளர்களில் ஒருவராக சர்வதேச அளவில் புகழ்பெற்று விளங்கிய மாமனிதர் தராகி சிவராமின் படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை உரிய விசாரணைகள் எவையும் இன்றி ஆட்சிகள் மாறினாலும் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமலும், அதற்கான நீதி பொறிமுறை உருவாக்கப்படாமலும் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டு வருகின்றமை இலங்கையின் உள்ளக பொறிமுறைக்குட்பட்டதான பாதுகாப்பு மற்றும் நீதித்துறை மீதான ஐயப்பாட்டினை வலுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் துப்பாக்கி முனையில் இடம்பெற்ற படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், கைதுகள் உள்ளிட்ட செயற்பாடுகள் மூலம் தமிழ் ஊடகத் துறையை அச்சுறுத்தி அடக்குவதற்கு

யாழ் வடமராட்சி ஊடக இல்லம்
JAFFNA VADAMARADCHI MEDIA HOUSE
යාපන වඩමාරච්චි මාධ්‍ය මාළිගාව
பதிவு இல: DS/VOR/KVD/SS-2018-02

மேற்கொள்ளப்பட்டு வந்த முனைப்புகள் தற்போதும் புதிய புதிய வடிவங்களில் தொடர்ந்தே வருகின்றன. தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்து வரும் ஊடகத்துறையை நசுக்குவதன் ஊடாக தமிழர்களின் குரலை மௌனிக்கச் செய்யும் நோக்கிலேயே இவை தொடர்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணியில் இலங்கை அரச படைகள் மற்றும் அவர்களோடு சேர்ந்து இயங்கிய துணை ஆயுதக்குழுவினருமே இருந்துள்ளனர். இருந்து வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவ்வாறு இருந்தும் நிமலராஜன் முதல் சிவராம் உட்பட பல ஊடகவியலாளர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டும், கடத்தப்பட்டு காணமல் ஆக்கப்பட்டமையுடன் தொடர்புடைய குற்றவாளிகளான மேற்குறித்த எவரொருவரும் நீதி பொறிமுறை ஊடாக கண்டுபிடிக்கப்படாத நிலையே தற்போது வரை தொடர்கின்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகத்துறை மீதான இவ்வாறான அச்சுறுத்தல் நிலையானது இலங்கையில் நிலவும் ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றின் மீதான கொடூரமான அடக்குமுறையின் வெளிப்பாடாகும்.

கொலைக் கலாசாரத்தின் பின்னணியில் ஊடகத்துறை மீதான இவ்வாறான தலையீடுகள் தொடர்வதனை உடனடியாக தடுத்து நிறுத்துவதுடன் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் இதுவரை காலமும் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை மூலம்நீதியைநிலைநாட்டபுதியஅரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும் என, படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவு நாளில் யாழ் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தி நிற்கின்றது.

இதேவேளை, தற்போது இராணுவத்தினரது ஆக்கிரமிப்பில் உள்ள, மாமனிதர் தராகி சிவராமால் கிளிநொச்சி அறிவியல் நகரில் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஊடக கல்லூரி வளாகத்தை உடனடியாக விடுவித்து அதனை யாழ் பல்கலைக் கழகத்தின் கீழ் தனி அலகாக கொண்டுவந்து ஊடக கற்கை பீடமாக தொடர்வதற்குரிய நடவடிக்கைகளினை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் தமிழ் ஊடகத்துறையினர் சார்பில் நாம் வினயமாக கேட்டுக் கொள்கின்றோம்."" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி சபை
## தேர்தல் களம்



# மன்னாரில் தமிழ்க் காங்கிரஸின் கூட்டத்தில் சிவராமுக்கு அஞ்சலி

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர் தராக்கி சிவராமின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை மாலை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை தமிழ்ஜ் காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்த மக்கள் சந்திப்பின் போது இந்நிகழ்வு கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர் தராக்கி சிவராமின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து மக்கள் சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஸ், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.













# இலங்கை நிர்வாகசேவை விசேட தரத்துக்கு பதவி உயர்வு பெற்ற 23 பேரில் 14 தமிழர்கள்

**(ந.லோகதயாளன்)**

இலங்கை நிர்வாகசேவை தரம் 1ஐச் சேர்ந்த 23 அதிகாரிகள் பொதுச் சேவை ஆணைக் குழுவினால் நிர்வாக சேவை விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

2025-01-01 முதல் இந்தத் தர உயர்வு அமுலாகும் என 2025-04-25 ஆம் திகதிய ஆணைக்குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிர்வாக சேவை விசேட தரத்திற்கு தேர்வான 23 அதகாரிகளில் 14 பேர் தமிழர்கள். ஒருவர் முஸ்லிம். 8 பேர் சிங்களவர்கள்.

பதவி உயர்வு பெறுவோர் பட்டியலில் எஸ்.சிவசிறி, எஸ்.முரளிதரன், எஸ்.அச்சுதன், கே.சிறிமோகன், என்.மணிவண்ணன், என்.சிவலிங்கம், ரி.திரேஸ்குமார், ஏ.சோதிநாதன், சுபாகினி மதியழகன் ஆகியோருடன் எஸ்.சத்தியசீலன், பி.தயானந்தன், வை.பரந்தாமன், எம்.சிறிஸ்காந்தகுமார் மற்றும் வி.மதுமதி ஆகியோரின் பெயர்கள் உள்ளன.




# கோணேஸ்வரர் தீர்த்தம் நேற்று

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத கோணைநாத பெருமானின் தீர்த்தோற்சவம் நேற்றுக் காலை பாவநாச தீர்த்தச் சுனையில் நடைபெற்றது.

வருடாந்த பிரமோற்ஸவத்தின் இறுதி தினமான நேற்றுக் காலை எம்பெருமான் ஆலயத்திலிருந்து எழுந்தருளி பாவநாச தீர்த்தசுனையை அடைந்ததை அடுத்து பக்தர்கள் புடை சூழ தீர்த்தம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் தினம் தேர்த் திருவிழா நடைபெற்றிருந்தது.









# மக்களின் ஒத்துழைப்பால் மட்டுமே பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியும்

## காஷ்மீர் முதல்வர் உமர் தெரிவிப்பு

"பயங்கரவாதத்துக்கு எதிரான மக்களின் போராட்டத்தை எனது அரசு வலுப்படுத்தும். ஏனெனில் பொதுமக்களின் ஒத்துழைப்பால் மட்டுமே அதை தோற்கடிக்க முடியும். துப்பாக்கியால் பயங்கரவாதியை கட்டுப்படுத்த முடியாது."

– இவ்வாறு ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையில் அம்மாநில முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை கண்டித்து ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் மீதான விவாதத்தில் பேசிய அம்மாநில முதல்வர் உமர் அப்துல்லா, "பயங்கரவாதத்துக்கு எதிரான மக்களின் போராட்டத்தை எனது அரசு வலுப்படுத்தும். ஏனெனில் பொதுமக்களின் ஒத்துழைப்பால் மட்டுமே அதை தோற்கடிக்க முடியும்.

மக்கள் நம்முடன் இருக்கும் போது தீவிரவாதமோ அல்லது பயங்கரவாதமோ நிச்சயம் முடிவுக்கு வரும். பயங்கரவாதத்துக்கு எதிரான மக்களின் கோபத்தைக் கருத்தில் கொண்டு, நாம் சரியான நடவடிக்கைகளை எடுத்தால், அதுவே அதன் முடிவின் தொடக்கமாகும். மக்களை அந்நியப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் நாம் எடுக்கக் கூடாது. துப்பாக்கியால் பயங்கரவாதியை கட்டுப்படுத்த முடியாது ஆனால், மக்கள் நம்முடன் இருந்தால் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும். அதற்கான நேரம் வந்துவிட்டதாக நான் நினைக்கிறேன்.

ஜம்மு காஷ்மீர் முழுவதும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தன்னிச்சையான போராட்டங்கள் நடந்தன. வெள்ளிக்கிழமை தொழுகைக்கு முன் ஸ்ரீநகரின் ஜாமியா மசூதியில் முதல் முறையாக இரண்டு நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். இந்த மாற்றத்தை வலுப்படுத்த முயற்சிப்போம்." என்று தெரிவித்தார்.

# நடிகர் அஜித்துக்கு பத்ம பூஷண் விருது







இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு பத்ம விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுவது வழக்கம்.


பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

அந்தவகையில் 2025ஆம் ஆண்டுக்கான பத்மபூஷன் விருதுகளை இந்திய மத்திய அரசு கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அறிவித்திருந்தது.

இதில் நடிகர் அஜித்குமாருக்கும் பத்மபூஷன் விருது அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் டில்லியில் நேற்று மாலை நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் நடிகர் அஜித்குமாருக்கு இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவினால் பத்மபூஷன் விருது வழங்கப்படவுள்ளது.

இவ்விழாவில் நடிகர் அஜித் குமாரின் மனைவி ஷாலினி மற்றும் குடும்பத்தினர் கலந்துகொண்டு அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். அவருக்கு அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் திரை துறையினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



# டில்லியில் பாரிய தீ விபத்து; சிறுவர்கள் இருவர் உயிரிழப்பு

## 800 இற்கும் மேற்பட்ட குடிசைகள் தீக்கிரை

இந்திய தலைநகர் புதுடில்லியிலுள்ள குடிசைப் பகுதியில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் 2 சிறுவர்கள் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரண்டரை வயது மற்றும் மூன்று வயதுடைய இரண்டு சிறுவர்களே சம்பவத்தில் உயிரிழந்தனர்.

அத்துடன் தீ விபத்தில் 800 இற்கும் மேற்பட்ட குடிசைகள் தீக்கிரையாகியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் வழக்குப்பதிவு செய்த பொலிஸார், விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் அப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட மின் கட்டமைப்புக்கள் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பலஎரிவாயு சிலிண்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எரிவாயு சிலிண்டர் வெடித்து விபத்து ஏற்பட்டிருக்கலாம்? எனவும் சந்தேகிக்கப்படுகிறது.













# இந்தியா – பாகிஸ்தான் இடையில் இராஜதந்திர மோதல்கள் தீவிரம்

இந்திய மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள இராஜதந்திர மோதல் மேலும் தீவிர மடைந்துள்ளது.

இந்த முறுகலுக்கு மத்தியில் இந்திய கடற்படையினர் நீண்டதூர ஏவுகணையை பரீட்சிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தனது தாக்குதல் பலத்தை நிரூபிக்கும் நோக்கில் இந்தியா அரபிக் கடலில் இந்த சோதனையை நடத்தியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது நாட்டில் 130 இற்கும் அதிக ஏவுகணைகளைக்கொண்ட அணு ஆயுத களஞ்சியமொன்று உள்ளதாக பாகிஸ்தான் அமைச்சர் ஹனீப் அப்பாசி கூறியுள்ளார்.

தம்மிடமுள்ள இராணுவ உபகரணங்களும் ஏவுகணைகளும் காட்சிக்காக வைக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜம்மு – காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் சுற்றுலா தளத்தில் அண்மையில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலாப்பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலால் தற்போது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே விரிசல் ஏற்பட்டுள்ளது.

# புதிய திருத்தந்தை தேர்வுக்கான மாநாடு மே 7 இல் ஆரம்பம்





புதிய திருத்தந்தையை தேர்ந்தெடுப்பதற்கான மாநாட்டை எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்க ரோமில் உள்ள கர்தினால்கள் இணக்கம் தெரிவித்ததாக வத்திக்கான் நேற்று அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை வத்திக்கானின் சினோட் மண்டபத்தில் நடைபெற்ற ஐந்தாவது பொதுச் சபைக் கூட்டத்தில் கர்தினால்கள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இந்த மாநாடு வத்திக்கானின் சிஸ்டைன் பேராலயத்தில் நடைபெறும் என்பதோடு, அதற்கு பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 3 நாள்கள் போர் நிறுத்தத்தை அறிவித்தார் ரஷ்ய ஜனாதிபதி



இரண்டாம் உலகப் போர் வெற்றியின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் 03 நாள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளார்.

அதன்படி, மே 8 ஆம் திகதி முதல் மே 10 ஆம் திகதி வரை, 72 மணி நேர போர்நிறுத்தம் அமுலில் இருக்கும் என்று கிரெம்ளின் அறிவித்துள்ளது.

இந்த போர் நிறுத்தத்தை உக்ரைனும் கடைப்பிடிக்க வேண்டும் என ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.04.2025




இன்று மனதில் பதற்றங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப் படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலை களை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசி யம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன் கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுட னான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரிய மானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர் கள். இரவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள் வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதி நிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சவால்களை சந்திக்க அமைதி யான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும். இதனால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.

பதட்டம் காரணமாக கால் வலியால் அவதிப்பட நேர லாம். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கை-கயுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று மிதமான வளர்ச்சி காணப் படும். பொறுமையும் உறுதியும் இருந் தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணி யில் தாமதங்கள் ஏற்படலாம். பணி யில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப் படுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷ யங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் காணப்படும். முன்னேற்றம் பெறு வதற்கான வலிமையையும் உற் சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக் கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாக கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிச மான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.04.2025




இன்று பல உற்சாகமான தருணங்களை நீங்கள் சந்திக்கலாம். புதியகட்ட வளர்ச்சி காண்பீர்கள். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை பகிர்ந்துகொள்வீர்கள். இது இருவருக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும்.

பண வரவு சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் திருப்தி நிலவும். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் சகஜமான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் மகிழ்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் அமைதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று தன்னம்பிக்கை குறைவாகவும், நம்பிக்கையின்மையும் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளில் தவறு நேர வாய்ப்பு உள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையுடன் ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது. உறவில் அமைதி ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் அவசியம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது பண இழப்பு ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி மற்றும் உயரமுத்த வாய்ப்புகள் காணப்படும்.




இன்று சிறிது மந்தமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் அதில் நற்பலங்களைக் காண முடியும்.

பணியில் கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும். கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் உங்கள் திறமை மேம்படும்.

இன்று நீங்கள் அற்பமான விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணம் குறைந்து காணப்படும். பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

உங்கள் தந்தையாருக்கு உடல் நல பாதிப்பு ஏற்படும்.

# மே 18 இல் உயிரிழந்தாவர்களுக்கு வவுனியா நகரில் மாநகரசபை எல்லைக்குள் நினைவுத்தூபி அமையும்

## கோடாரி சுயேச்சை வேட்பாளர் புஷ்பதேவா தேர்தல் உறுதிமொழி

(கி.வசந்தன்)

மே 18 இல் உயிரிழந்தவர்களுக்காக வவுனியா மாநகரசபை எல்லைக்குள் தூபி அமைக்கப்படும் என வவுனியா மாநரகர சபையில் கோடாருச் சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளர் ம.புஷ்பதேவா தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் –

காலத்தின் தேவை கருதியே நாம் இந்தத் தேர்தலில் களம் இறங்கியுள்ளோம். எங்களை தெரிவு செய்தால் அரசியல் அற்ற கிராம சேவகர்களாக நாங்கள் நிச்சயம் செயற்படுவோம். எமது சுயேச்சை குழு, மாநகர சபையின் அனைத்து வட்டாரங்களிலும் வசிக்கின்றஅந்தந்தப்பகுதிகளில்வாக்குரிமைகளை கொண்ட வெற்றி வேட்பாளர்களைக் களம் இறக்கியுள்ளது.

இந்த தேர்தலில் ஒவ்வொரு கிராமத்திலும் வட்டாரத்திலும் அனைவருக்கும் தெரிந்தவர்களே பலர் போட்டியிடுகின்றனர். எனவே தெரிந்தவர்கள் என நீங்கள் அனைவரும் வாக்கை அளித்தால் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு தெரியாதவர்களே தெரிவு செய்யப்படுவர். ஆகவே தெரிந்தவர்கள் என்பதை விட தேவையானவர்களை அடையாளம் கண்டு உங்கள் வாக்கை அளியுங்கள்.




இன்று போரில் உயிர் நீத்த மக்களுக்கான மே18 நினைவேந்தலை யார் செய்வது என்ற போட்டி ஏற்பட்டுள்ளது. எனவே அதனை அனுஷ்டிப்பதற்காக மாநகரசபை எல்லைக்குள் ஒரு தூபி அமைக்கப்படும். அங்கு அரசியல் கலக்காது பொதுக்கட்டமைப்பின் கீழ் அந்த நினைவேந்தலை செய்வதற்கான ஒழுங்கமைப்பினை நாங்கள் செய்து கொடுப்போம்.

அத்துடன் நகரத்தில் நடைபாதை வியாபாரிகள் விடயத்தில் அவர்களும் பாதிக்கப்படாத வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும். அத்துடன் மாநகரத்தை சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருக்க வேண்டியது அவசியம். அதற்காக மாநகரசபையின் வழிகாட்டலில் பொது அமைப்புக்களின் உதவிகளை நாடுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

நாம் வெற்றிபெற்றால் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று சொல்வதற்கும் அப்பால் மாநகரசபையின் மூலம் எவ்வாறான வேலைத்திட்டங்களை செய்யமுடியுமோ அவற்றை முழுமையாக நிச்சயம் செய்வோம். – என்றார்.